## வரையறுக்கப்பட்ட பிஸினஸ் லங்கா ஏஎன் (தனியார்) கம்பனி - 2015

வரையறுக்கப்பட்ட பிஸினஸ் லங்கா ஏஎன் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நான் உதவியைப் பெற்றிருந்தேன்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வுசு நியமங்களுக்கு இணங்க மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

கம்பனியானது தொடர்ச்சியான வியாபார நட்டங்கள், பாதகமான செயற்பாட்டு மூலதனம் மற்றும் பாதகமான கடன் தீர்க்கும் எல்லை என்பவற்றினை எதிர்கொள்கின்றது. மேலும், 2016 ஏப்ரல் 01 இலிருந்து கம்பனியினுடைய பிரதான செயற்பாடுகள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணிகள் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தது. இத்தகைய நிகழ்வுகளானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக நீடிப்பதற்குரிய கம்பனியின் இயலுமை மீது முக்கியமான சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய பொருண்மையான நிச்சயமற்ற தன்மையை சுட்டிக்காட்டுகின்றது. ஆகையால் அதனுடைய சொத்துக்களை தேறுவதற்கும் மற்றும் சாதாரண வியாபர நிலமைகளின் கீழ் அதன் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்கும் முடியாததாகக் காணப்படலாம். ஆகையால் நிதிக்கூற்றுக்கள் இந்த உண்மையை (அதற்கான குறிப்பில்) வெளிப்படுத்திருக்கவில்லை.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 பாதகமான அபிப்பிராயம்

பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக, வரையறுக்கப்பட்ட பிஸினஸ் லங்கா ஏஎன் (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்

மீளாய்வாண்டின் போது ரூபா 5,527,010 தொகை அறவிடமுடியாக் கடன் ஐயக்கடன்களாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்வதற்கு பின்பற்றப்பட்ட நடைமுறை கணக்காய்விற்குக் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 5,549,998 உடன் ஒப்பிடும் போது ரூபா 10,575,658 ஐ விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 5,025,660 ஆன பின்னடைவினை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்கான வருமானத்தில் ஒரு குறிப்பிடத்தக்களவு பின்னடைவு ஏற்பட்டமை நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த பின்னடைவைக்கு பிரதான காரணமாகக் பங்களிப்புச் செய்கின்றன.

## 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

### 3.2.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

மீளாய்வாண்டிற்கான கம்பனியினுடைய மொத்த இலாப எல்லை மற்றும் இலாப எல்லையானது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 18 சதவீதம் மற்றும் 51 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. நிதிக்கூற்றுக்களினுடைய பகுப்பாய்வு மீளாய்வொன்றை அதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வெளிப்படுத்தப்பட்ட சில விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2015<br>சதவீதம் | 2014<br>சதவீதம் |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை | 29 | 47 |
| இலாப எல்லை (விற்பனைகள் கிரயத்தின் மீதான மொத்த இலாபம்) | 41 | 92 |
| திரும்பல் மீதான நிர்வாகக் கிரயம் | 77 | 41 |
| திரும்பல் மீதான விற்பனை மற்றும் விநியோகக் கிரயம் | 67 | 38 |

### 3.2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

மீளாய்வாண்டினதும் மற்றும் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டினதும் நடைமுறைப் பொறுப்புக்களுடன் நடைமுறைச் சொத்துக்களை பகுப்பாய்வு செய்கையில் முறையே ரூபா 10,418,648 மற்றும் ரூபா 369,759 ஆன எதிர்மறையான தொழிற்படு மூலதனம் அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க அதே காலப்பகுதிக்கான கூறப்பட்ட மூலதனத்துடனான தேறிய சொத்துக்களினை பகுப்பாய்வு செய்கையில் முறையே ரூபா 12,740,116 மற்றும் 2,164,458 ஆன எதிர்மறையான கடன் தீர்க்கும் எல்லை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2015<br>ரூபா. | 2014<br>ரூபா. |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் | 5,420,500 | 10,801,514 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 15,839,148 | 11,171,273 |
| தொழிற்படு மூலதனம் | (10,418,648) | (369,759) |
| தேறிய சொத்துக்கள் | (9,740,116) | 835,542 |
| கூறப்பட்ட மூலதனம் | 3,000,000 | 3,000,000 |
| கடன் தீர்க்கும் எல்லை | (12,740,116) | (2,164,458) |